

நாகர்கோவில் மாநகரம் வடசேரி சுற்றுவட்டார பகுதிகளைச் சார்ந்த மாற்று கட்சிகளைச் சார்ந்த இளைஞர்கள் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அருண்காந்த் ஏற்பாட்டில் லெனின் தலைமையில் குமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ், மாநகர செயலாளர். ஆனந்த் ஆகியோர் முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். நிகழ்ச்சியில் இளைஞரணி துணை அமைப்பாளர் வக்கீல் சரவணன், மாநகர பிரதிநிதி அஜித் உட்படகழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருப்பத்தூர் மாவட்டம்

## மாதனூர் கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ப.ச.சுரேஷ்குமார், குடியாத்தம் வடகிழக்கு ஒன்றியச் செயலாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவரை மாதனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **க.இராமமூர்த்தி**, (3/110, காந்தி ரோடு, பெரியாங்குப்பம் அஞ்சல், ஆம்பூர் வட்டம், திருப்பத்தூர் மாவட்டம் 635 814.) அவர்கள் மாதனூர் கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்– 18.11.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### அரியலூர் மாவட்டத்தில்

# 71வது அகில இந்திய கூட்டுறவு வார விழா!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

அரியலூர், நவ. 20 -

அரியலூர் மாவட்டம், வாலாஜாநகரம், தனியார் திருமண மண்டபத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் "கூட்டுறவு மூலம் சுய தொழில் மேம்பாடு, வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் திறன் மேம்பாடு" எனும் மையக் கருத்துடன் நடைபெற்ற 71 வது அகில இந்திய கூட்டுறவு வார விழாவினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, 777 பயனாளிகளுக்கு ரூ.7.30 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் பொ. இரத்தினசாமி தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்விழாவில், போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:-

71வது அகில இந்திய கூட்டுறவு வார விழா 14.11.2024 முதல் 20.11.2024 வரை தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட அளவிலான 71 வது அகில இந்திய கூட்டுறவு வார விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அரசின் முதுகெலும்பாக இருப்பது கூட்டுறவுத்துறையாகும். உள்ளாட்சி துறையும், கூட்டுறவுத்துறையும் ஏழை, எளிய மக்களுக்கு மிகவும் சிறப்பாக செயலாற்றுகின்ற துறைகளாகும். அந்த வகையில் வருடந்தோறும் கூட்டுறவு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மக்களுடைய அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதில் கூட்டுறவுத்துறை தான் முதலிடமாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. உணவுப்பொருட்களை ஏழை, எளிய மக்களின் இல்லங்களுக்கு கொண்டு சேர்க்கின்ற பணியை கூட்டுறவுத்துறை மூலமாக செயபடுத்தப்படுகிறது.

அதேபோன்று விவசாயிகளுக்கான கடனுதவிகளும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலமான கடனுதவிகளும் மற்றும் சிறுபான்மையினருக்கான கடனுதவிகளும் என அனைத்தும் கூட்டுறவுத்துறையின் மூலமாக கொண்டு சேர்க்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு அவர்களின் வாழ்வில் வளமையை ஏற்படுத்துகின்ற சிறப்பான பணியை கூட்டுறவுத்துறை மேற்கொண்டு வருகிறது.

மேலும், நடப்பாண்டில் 58,047 நபர்களுக்கு ரூ.417.60 கோடி அளவிற்கு கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. அந்தவகையில் அரியலூர் மாவட்டத்தில் 20,514 நபர்களுக்கு ரூ.182.40 கோடி மதிப்பிலான பயிர்க் கடனுதவிகளும், 3,756 நபர்களுக்கு ரூ.15.66 கோடி மதிப்பிலான கால்நடைபராமரிப்புக் கடனுதவிகளும், 36 நபர்களுக்கு ரூ.18 இலட்சம் மதிப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான கடனுதவிகளும், 6,285 நபர்களுக்கு ரூ.37.32 கோடி மதிப்பிலான மகளிர் சுயஉதவிக் குழுக் கடனுதவிகளும், 112 நபர்களுக்கு ரூ.56.00 இலட்சம் டாம்கோ கடனுதவிகளும், 243 நபர்களுக்கு ரூ.1.14 கோடி மதிப்பிலான டாப்செட்கோ கடனுதவிகளும். 92 நபர்களுக்கு ரூ.2.62 கோடி மதிப்பிலான தானிய ஈட்டுக்கடனுதவிகளும் கூட்டுறவுத்துறையின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் மூலம் ஒரு பெட்ரோல் விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

மேலும். 477 பள்ளிகளில் பயிலும் 26,280 மாணவர்களுக்கு கூட்டுறவுத்துறையின் மூலம் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் 15.11.2024 அன்று அரியலூர் மாவட்டத்திற்கு வருகை தந்து அனைத்து பகுதிகளுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி, பல்வேறு புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளார். கடந்த ஆண்டு பெரம்பலூர் மாவட்டம், எறையூரில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் செயற்கை காலணி பூங்கா துவக்கப்பட்டது. அதேபோன்று அரியலூர் மாவட்டத்திற்கு வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டு ஜெயங்கொண்டம் மகிமைபுரத்தில் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் செயற்கை காலணி பூங்கா அமையுள்ள புதிய சிப்காட் தொழிற்பேட்டை அமைவதற்கு அடிக்கல் நாட்டியுள்ளார். வரும் காலங்களில் அந்த பணிகள் நிறைவுற்று அவை செயல்பட துவக்கும்போது அதன்மூலம் 15,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் அருமையான சூழலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் சென்னை பகுதியை சுற்றியே தொழிற்சாலைகள் அமையும் சூழல் இருந்தது. பெரிய தொழிற்சாலைகளுக்கு வேலைக்கு செல்ல வேண்டுமென்றால் சென்னைக்கு செல்ல வேண்டும் என்ற நிலையை மாற்றி நம்முடைய பகுதிகளிலேயே வேலைவாய்ப்பு பெறுகின்ற வாய்ப்பு ஏற்படுத்தி, அனைத்து பகுதிகளும் சமமான வளர்ச்சி பெறவேண்டும் என்ற எண்ணத்தில் சிறப்பாக பணியாற்றுவதால்தான் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இந்தியாவிலேயே முதன்மையான முதலமைச்சராக திகழ்கிறார்.

அதேபோன்று அரியலூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட வேண்டும் என்பது நீண்டநாள் கோரிக்கையாக உள்ளது. அதனையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்று அரியலூர் மாவட்டத்தில் ரூ.101.50 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கப்படும் என நேற்றைய தினம் அறிவித்துள்ளார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அரியலூர் என்ற மாவட்டம் உருவாக்கப்பட்டது. அதனை வளர்ச்சி பாதைக்கு கொண்டு செல்கின்ற பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்.

மேலும், அரியலூர் மாவட்டத்திற்கு அமைச்சர் இல்லை என்ற குறை இருந்தது. அந்த குறையையும் தன்னுடைய ஆட்சிகாலத்தில் நீக்கி உங்கள் பிரதி நிதியாக என்னை தேர்வு செய்து அமைச்சராக பணியாற்றுகின்ற வாய்ப்பை வழங்கியுள்ளார். எனவே அரியலூர் மாவட்டம் மேலும் முன்னேற்ற பாதைக்கு செல்ல வேண்டும், இந்தியாவிற்கு வழிகாட்டியாக திகழும் திராவிட மாடல் ஆட்சியினை வழங்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து உறுதுணையாக இருக்கவேண்டும் என தமிழ்நாடு அரசு போக்கு வரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.

தொடர்ந்து கூட்டுறவு வார விழாவில் சிறப்பாக பணியாற்றிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, நகர கூட்டுறவு வங்கி, கைத்தறி மற்றும் நெசவாளர் கூட்டுறவு கடன் சங்கங்கள், திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள், கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப்போட்டி கவிதைப்போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கேடயங்கள் மற்றும் பரிசுகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் ம.தீபா சங்கரி, அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், மண்டல மேலாளர் டாப்செட் திருச்சி ஹபி புல்லா, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாது காப்பு அலுவலர் ராமலிங்கம், மண்டல மேலாளர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழகம் அரியலூர் ராஜா,

பொது மேலாளர் திருச்சிராப்பள்ளி மத்திய மாவட்ட கூட்டுறவு வங்கி முருகன், துணைப்பதிவாளர் பால்வளம் (பொறுப்பு) நாராயணசாமி, மாவட்ட துணை செயலாளர் சி.சந்திர சேகரன், ஒன்றிய கழக செயலாளர்கள் இரா.கென்னடி, மா.அன்பழகன், நகர கழக செயலாளர் இரா.முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன்

வாலாஜாநகரம் ஊராட்சி மன்றத்தலைவர் அபிநயா இளையராஜா, பல்வேறு துறைகளின் மாவட்ட அளவிலான அதிகாரிகள், கூட்டுறவுத்துறை அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### வேலூர் மாவட்டம்

## பேர்ணாம்பட்டு தெற்கு ஒன்றியத்தில் அடங்கியுள்ள ஊராட்சிகள் மற்றும் ஒன்றியப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

**திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள மாதனூர் மத்திய ஒன்றியத்திற்குட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள 10 ஊராட்சிகள் வேலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட குடியாத்தம் சட்டமன்றத் தொகுதிக்குள் வருவதால்;**

**கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 10 ஊராட்சிகள் வேலூர் மாவட்டத்தில் சேர்க்கப்பட்டு பேர்ணாம்பட்டு தெற்கு ஒன்றியக் கழகமாக அமைகிறது. இனி, இவ்வொன்றியம் வேலூர் மாவட்டத்தின்கீழ் செயல்படும்.**

**அவ்வாறு பிரிக்கப்பட்ட பேர்ணாம்பட்டு தெற்கு ஒன்றியம் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாக அமையும்.**

**பேர்ணாம்பட்டு தெற்கு ஒன்றியம் (குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி):** ஊராட்சிகள் – 1.நரியம்பட்டு, 2.கைலாசகிரி, 3.சோமலாபுரம், 4.பெரியகோமேஸ்வரம், 5.சாத்தம்பாக்கம், 6.அயித்தம்பட்டு, 7.சின்ன வரிகம், 8.பெரியவரிகம், 9.துத்திப்பட்டு, 10.தேவலாபுரம் ஆகிய

10 ஊராட்சிகள் மற்றும் மிட்டாளம் ஊராட்சியில் உள்ள பைரப்பள்ளி வாக்குச் சாவடி எண்.262.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்**

மேற்கண்டவாறு அமைந்த பேர்ணாம்பட்டு தெற்கு ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்.

**பேர்ணாம்பட்டு தெற்கு ஒன்றியம்**

**பொறுப்பாளர் : எம்.டி. சீனிவாசன்,** 102, இராமர் கோவில் தெரு, சாத்தம்பாக்கம். வேலூர் மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்– 18.11.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.




சேலம் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில் வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் அவசரச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### திருப்பத்தூர் மாவட்டம்

## குடியாத்தம் வடகிழக்கு - அணைக்கட்டு தெற்கு ஆகிய ஒன்றியங்களுக்குட்பட்ட ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

**வேலூர் மாவட்டத்தில் உள்ள குடியாத்தம் கிழக்கு ஒன்றியத்தில் உள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள 5 ஊராட்சிகள் திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட ஆம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குள் வருவதாலும்;**

**அதைப்போலவே, வேலூர் மாவட்டத்தில் உள்ள அணைக்கட்டு கிழக்கு – அணைக்கட்டு மேற்கு – அணைக்கட்டு மத்திய ஆகிய ஒன்றியங்களில் உள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள 13 ஊராட்சிகள் திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட ஆம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குள் வருவதாலும்;**

**கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஊராட்சிகளை திருப்பத்தூர் மாவட்டத்தில் சேர்க்கப்பட்டு;**

**குடியாத்தம் வடகிழக்கு, அணைக்கட்டு தெற்கு என்ற இரண்டு ஒன்றியக் கழகங்களாக அமைகிறது. இவ்விரண்டு ஒன்றியங்களும் இனி, திருப்பத்தூர் மாவட்டத்தில் செயல்படும்.**

**குடியாத்தம் வடகிழக்கு, அணைக்கட்டு தெற்கு ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாக அமையும்.**

**குடியாத்தம் வடகிழக்கு ஒன்றியம் (ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி) :** ஊராட்சிகள் – 1.அகரம்சேரி, 2.சின்னசேரி, 3.கொள்ளமங்கலம், 4.கூத்தம்பாக்கம், 5.பள்ளிக்குப்பம் ஆகிய 5 ஊராட்சிகள் .

**அணைக்கட்டு தெற்கு ஒன்றியம் (ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி) :** ஊராட்சிகள் – 1.அகரம், 2.அக்ரகாரம், 3.தோளப்பள்ளி, 4.குருவராஜபாளையம், 5.வேப்பங்குப்பம், 6.குப்பம்பட்டு, 7. இராமநாயிணிகுப்பம், 8.அரிமலை, 9.குப்பம்பாளையம், 10. சின்னப்பள்ளிகுப்பம், 11.பாக்கம்பாளையம், 12.மேல்பள்ளிப்பட்டு, 13.ஆசனாம்பட்டு ஆகிய 13 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

**மேற்கண்டவாறு அமைந்த குடியாத்தம் வடகிழக்கு, அணைக்கட்டு தெற்கு ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.**

**குடியாத்தம் வட கிழக்கு ஒன்றியம்**

**பொறுப்பாளர் : ப.ச.சுரேஷ்குமார்,** அகரம்சேரி கிராமம் மற்றும் அஞ்சல், திருப்பத்தூர் மாவட்டம்.

**அணைக்கட்டு தெற்கு ஒன்றியம்**

**பொறுப்பாளர் : த. முரளி,** 2/75ஏ, அகரம் காலனி, தோளப்பள்ளி அஞ்சல், மாதனூர் வழி, அணைக்கட்டு வட்டம், திருப்பத்தூர் மாவட்டம் 635 804.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்– 18.11.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.




மேற்கு மண்டல கழக ஆதிதிராவிடர் நலக்குழு ஆய்வுக் கூட்டம் ஈரோடு தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் கழக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு தலைமையில் அமைச்சர் மதிவேந்தன் முன்னிலையில் ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சரும், இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை அணியின் சார்பில் சிறப்பாக கொண்டாடுவது எனவும், கழக ஆக்க பணிகள் ஆற்றுவது குறித்தும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் உள்ளிட்ட ஆதிதிராவிடர் நலக் குழுவை சார்ந்த மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி பேரூர், வார்டு கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தின் இறுதியில் மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் சென்னியப்பன் நன்றியுரை கூறினார்.

### தஞ்சை சாஸ்த்ரா பல்கலைக்கழகப் பொறுப்பாளர்

# திருமதி. சந்திரா சேதுராமன் மறைவு

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, நவ. 20-

தஞ்சை சாஸ்த்ரா பல்கலைக் கழகப் பொறுப்பாளர் திருமதி.சந்திரா சேதுராமன் அவர்கள் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

தஞ்சை சாஸ்த்ரா பல்கலைக்கழகப் பொறுப்பாளர் திருமதி. சந்திரா சேதுராமன் அவர்கள் நேற்று (18.11.2024) மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அன்னாரை இழந்து வாடும் அவரது கணவரும் சாஸ்த்ரா பல்கலைக்கழக வேந்தருமான ஆர்.சேதுராமன் அவர்களுக்கும், மகன்கள் வைத்திய சுப்ரமணியம் (துணைவேந்தர்), சுவாமிநாதன் (புல முதன்மையர்), மகள் திருமதி. பிரியா மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### வேலூர் மாவட்டம்

## குடியாத்தம் கிழக்கு மற்றும் அணைக்கட்டு கிழக்கு, அணைக்கட்டு மேற்கு, அணைக்கட்டு மத்திய ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

**கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் வேலூர் மாவட்டத்தில் அடங்கியுள்ள குடியாத்தம் கிழக்கு மற்றும் அணைக்கட்டு கிழக்கு, அணைக்கட்டு மேற்கு, அணைக்கட்டு மத்திய ஆகிய ஒன்றியக் கழகங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.**

**குடியாத்தம் கிழக்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் – 1.சிங்கள்பாடி, 2. அனங்காநல்லூர், 3.கொத்தகுப்பம், 4.கூடநகரம், 5.மேல்முட்டுகூர், 6.தாழையாத்தம், 7.மேல்ஆலத்தூர், 8.பட்டு, 9.ஒலக்காசி ஆகிய 9 ஊராட்சிகள்.

**அணைக்கட்டு கிழக்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் – 1.புத்தூர், 2.பொய்கை, 3.சத்தியமங்கலம், 4.இலவம்பாடி, 5.மருதவல்லிபாளையம், 6.செதுவாலை, 7.விரிஞ்சிபுரம், 8.இறைவன்காடு, 9.கழனிப்பாக்கம், 10.கந்தனேரி ஆகிய

10 ஊராட்சிகள்.

**அணைக்கட்டு மேற்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் – 1.மகமதுபுரம், 2.தேவிசெட்டிகுப்பம், 3.கரடிகுடி, 4.ஓங்கப்பாடி, 5.வரதலம்பட்டு, 6.கீழ்கொத்தூர், 7.பின்னதுரை, 8.பீஞ்சமந்தை, 9.ஜார்தான் கொல்லை, 10.பலாம்பட்டு, 11.சேர்ப்பாடி, 12.நேமந்தபுரம், 13.அத்திகுப்பம், 14.மடையப்பட்டு, 15.வண்ணாந்தாங்கல், 16.மேல்அரசம்பட்டு ஆகிய 16 ஊராட்சிகள் மற்றும் ஒடுக்கத்தூர் பேரூர்.

**அணைக்கட்டு மத்திய ஒன்றியம்:** ஊராட்சிகள் – 1.கெங்கநல்லூர், 2.வல்லண்டராமம், 3.வசந்தநடை, 4.அணைக்கட்டு, 5.அப்புக்கல், 6.ஊனை, 7.ஊனைவாணியம்பாடி, 8.ஒதியத்தூர், 9.பிராமண மங்கலம், 10.திப்பசமுத்திரம், 11.கீழ்கிருஷ்ணாபுரம், 12.கருங்காலி ஆகிய

12 ஊராட்சிகள் மற்றும் பள்ளிகொண்டா பேரூர்.

**மேற்கண்டவாறு அமைந்த குடியாத்தம் கிழக்கு மற்றும் அணைக்கட்டு கிழக்கு, அணைக்கட்டு மேற்கு, அணைக்கட்டு மத்திய ஆகிய ஒன்றியங்களில் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக நிர்வாகத்தின் கீழ் செயல்படும்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்– 18.11.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



நாகை மாவட்டம் நாகை நகர தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் வார்டு கழக செயலாளர்கள் பிரதிநிதிகள் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் உரையாற்றினார். உடன் மாவட்ட கழக அவைத்தலைவர் மு.லோகநாதன், நாகை நகர கழக செயலாளர் இரா.மாரிமுத்து, நகரக் கழக நிர்வாகிகள்இரா.முருகையன், ஆர்.ரமணி, பி.திலகர், வெற்றிலைக்கடை சிவா, சித்ரா குலோத்துங்கன் அபுபக்கர்மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஆர்.ஆர். குலோத்துங்கன் மற்றும் பலர் உள்ளனர்.